திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.த.ப.ஜெய்பீம்

ந.க.10760/2015/அ4 நாள்:14.09.2022

பொருள் : பொதுப் பணியாளர்கள் - திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு - ஊத்துக்குளி வட்டாட்சியர் அலுவலகம் - இளநிலை வருவாய் ஆய்வாளர் - செல்வி.ஆர்.தேவி- பணிவரன்முறை செய்து உத்திரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :

1 திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை நகல். 10760/2015/அ4 நாள். 18.07.2017

2 அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு நாள். 26.02.2021

3 இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள. 29.12.2017 மற்றும் கடைசியாக 03.01.2022

4 சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக கடிதம் ஆ.கு.3/11397/2018 நாள். 19.07.2022

* * * * * *

**உத்தரவு :-**

திருப்பூர் மாவட்ட வருவாய் அலகு, ஊத்துக்குளி வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் செல்வி.ஆர்.தேவி என்பவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு, 24.07.2017 மு.ப முதல் பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு பார்வை-3ல் காணும் கடிதம் அனுப்பட்டுள்ளது.

2) இந்நிலையில் பார்வை-4ல் வரப்பெற்றுள்ள கடிதத்தில், இரண்டாம் மனைவியின் வாரிசுதாரருக்கு விதித்தளர்வு செய்யும் நிலை எழவில்லை என தெரிவித்துள்ள அரசுக்கடிதத்தினை மேற்கொள்ளிட்டு, அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாயப்புத்துறை நாள். 26.02.2021-ன்படி தனியர் ஆர்.தேவி என்பவரின் பணியினை வரன்முறை செய்ய மாவட்ட அளவிலேயே உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விபரத்தினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், தனியரின் அசல் ஆவணங்கள் மற்றும் சான்றுகளை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகையை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது.

3) பார்வை-2ல் காணும் அரசாணை எண் 48ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எவ்வித விதித்தளர்வு (Relaxation of rules) மற்றும் அரசாணைகளுக்கு விளக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத இளநிலை வருவாய் ஆய்வாளர்களுக்கு சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு பணியாளரின் பணியினை

வட்டாட்சியர் அலுவலகம் ஊத்துக்குளி, திருப்பூர் மாவட்டம் 23 SEP 2022

Scanned with OKEN Scanner

வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) எனவே ஊத்துக்குளி வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளர் திருமதி.ஆர்.தேவி என்பவருக்கு தனியர் பணியில் சேர்ந்த நாளான 24.07.2017 மு.ப. பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

ஒம்/-த.ப.ஜெய்பீம்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
திருப்பூர்

பெறுநர் :
செல்வி.ஆர்.தேவி,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஊத்துக்குளி
} ஊத்துக்குளி வட்டாட்சியர் மூலம் சார்பு செய்ய

நகல்: வட்டாட்சியர், ஊத்துக்குளி
நகல்: "அ4" இருக்கைக்கு, உபரி - 1.

// உண்மை நகல் // உத்திரவுப்படி //

14/9/22

மாவட்ட வருவாய் அலுவலருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது),
திருப்பூர்

14.9.22

Scanned with OKEN Scanner